திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம் உல்லாசப் பயணிகளை கவர்கின்ற இடமாக இருக்கிறது. குறிப்பாக கோவளம் மிகவும் அதிகமாக உல்லாசப் பயணிகளை கவர்ந்திருக்கிறது. இப்படிப் பட்ட இடங்களுக்கு போகிற போது அந்த உல்லாசப் பயணி களுக்கு மிகவும் சிரமம் உண்டாகிறது. அதைத் தவிர்க்கின்ற வகையில் இப்படிப்பட்ட பாலங்களை உடனுக்குடன் சீரமைப்பு செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு உல்லாசம் இருக்கிறதோ அவை எல்லாம் உல்லாசத்திற்கு ஏற்ற இடம் தான் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு போய் பார்த்து விட்டு வந்து கேள்வி கேட்பதில் இருந்தே அது நல்ல இடம் தான் என்று புரிகிறது. இருந்தாலும் நிதிப் பிரச்சனை என்பது எல்லா இடங்களுக்கும் இருப்பது போன்று தான் இதற்கும் இருக்கிறது. எனவே எது எது அவசியமோ அதை எல்லாம் லிஸ்ட் அவுட் செய்து எடுத்துக்கொண்டு வருகிறோம். அதன் முக்கியத்துவம் கருதித்தான் 25 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்ற கணக்கில் ஒரு திட்டம் தீட்டி வைத்திருக்கிறோம். ஆனால் பணம் இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு ஒதுக்க முடிய வில்லை. எதிர் காலத்தில் பார்க்கலாம்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லு கின்ற சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. அங்கே பல ஆக்கிரமிப்பாளர்கள் சாலையிலேயே வீடு கட்டிக் கொண்டிருக் கிறார்கள். உல்லாசப் பயணிகள் அதிகமாக செல்லுகின்ற சாலை யாக இருப்பதால் அதை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அவற்றை அகற்றிவிட்டு முறைப் படி அகலப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கலாம். இதனை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வாய்ப்பு இருக்காது என்று நினைக்கிறேன். எனவே போக்குவரத்திற்கு உகந்த வகையில்—உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள், அந்தச் சாலையை சீர்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கையெடுக்கலாம்.

### தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரி இரயில் பாதை.

635. (*வினா எண் 13213) திரு. வே. இரா. ஜெயராமன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரி இரயில் பாதை ஏற் படுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இரயில்வேக்கு தூத்துக்குடி—காயல்—ஆறுமுகநேரிக்கு இரயில்பாதை இணைப்பு அமைப்பதற்கான கருத்து எதுவும் இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தெந்த புதிய வழித்தடங்களில் இந்த ரெயில் பாதைகளைப் போட வேண்டுமென்று மத்திய அரசுக்கு நமது அரசு சிபார்சு செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு ரெயில்வே சம்பந்தப்பட்ட பாதைகளை அமைத்தல், அகலப்படுத்தல், மேம்பாலம் கட்டுதல் போன்ற ஏறத்தாழ 22 பணிகளை சிபார்சு செய்திருக்கிறோம். ஒவ்வொன்றாகப் படிப்பதென்றால் அரை மணி நேரத்திற்கு மேலாகும். ஆகவே தனியாக அறிக்கை கொடுக்க தயாராக இருக்கிறேன்.

சென்னையில் மினி டாக்ஸிகள்.

636 (*வினா எண் 13415) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் மினி டாக்ஸிகள் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மினி டாக்சிகள்' இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, மினி டாக்சிகள் இயக்கும் செயற்குறிப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எதிர்காலத்திலாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளையெடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? சென்னை மாநகரத்தில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் ஓடுகின்றன என்ற விவரத்தையும் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, டாக்சிகளே சிறிய வண்டிகள்தான், மினி டாக்சிகள் என்று இருப்பதாகத் தெரியவில்லை. மினி டாக்சியென்றால் என்ன வென்று நம்முடைய சட்டத் திட்டத்திலும் வகுத்திருப்பதாகத் தெரியவில்லை. டாக்சிக்கு அடுத்து ஆட்டோ ரிக்ஷாதான் சிறிய வாகனம். இப்போது போதிய அளவிற்கு ஆட்டோ ரிக்ஷாக்களும், டாக்சிகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆட்டோ ரிக்ஷாக்கள் அதிகமாக வந்துவிட்ட காரணத்தால்